# சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (25.09.2025 - வியாழக்கிழமை) பகல் 12.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி,எண்.7. செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட , சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர் - சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை, பாரதி மகளிர் கல்லூரியில் நேற்று (24.09.2025) நடைபெற்ற விழாவில், அமைச்சர் முனைவர் கோவி. செழியன் Mando Automotive, UPS (United Parcel Service) o Agnikul (Institute Management committee) உறுப்பினராவதற்கான அழைப்பிதழினை வழங்கினார். உடன் உயர்கல்வித் துறை அரசு செயலாளர் பொ. சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் எ. சுந்தரவல்லி, 5 வது மண்டலக்குழுத் தலைவர் பி. ஸ்ரீராமலு, கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ) முனைவர் சு. தாரணி ஆகியோர் உள்ளனர்.

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# சட்டமன்றத் தொகுதி வாரியாக (BLA) 2, வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதி வாரியாக (BLA) 2 மற்றும் வாக்குசாவடி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

| சட்டமன்ற தொகுதி | நாள் – 28.09.2025 | நடைபெறும் இடம் |
|---|---|---|
| செய்யூர் | காலை 9.00 மணி | சுபம் கன்வென்ஷன், நெல்வாய் பாளையம் |
| மதுராந்தகம் | காலை 11.00 மணி | முகுந்தன் மகால், கருங்குழி |
| உத்திரமேரூர் | பிற்பகல் 2.00 மணி | பாலாஜி மகால், ஆற்பாக்கம் |
| காஞ்சிபுரம் | மாலை 4.00 மணி | ஏ.ஜெ.எஸ். மகால், கீழம்பி |

எனவே, சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், (BLA) 2 வாக்குசாவடி ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் கலந்துக்கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



பெரம்பூர் தொகுதி 44 வது வட்டம் பெரியார் நகர் கட்டபொம்மன் தெரு, கே.வி.கே.சாமி தெரு,இஸ்மாயில் தெரு பன்னீர்செல்வம் தெருவில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம் எல் ஏ, ஆய்வு மேற்கொண்டு மக்களின் குறைகளை கேட்டு பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை கேட்டு கொண்டார். உடன் க.ஜெயராமன் எஸ்.ஆர்.கமலகண்ணன், வி.தயாளன், மாமன்ற உறுப்பினர் சர்ப ஜெயாதாஸ் நரேந்திரன், த.ஆறுமுகம், சென்னை மாநகராட்சி குடிநீர் வாரியம் மின்சார வாரிய அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 (அ) வட்டத்திற்குட்பட்ட புல்லா அவென்யூ, செனாய் நகரில் அமைந்துள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் முதல்வர் படைப்பகம் அமைப்பதற்கான துவக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே.மோகன், பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டச் செயலாளர் சி.பி.திருமலை, 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உடன் 101, 101 (அ) வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் உள்ளனர்.



திருவொற்றியூர் தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ.வும், நகராட்சி மன்ற தலைவரும், திருவொற்றியூர் நகரகழக செயலாளராக இருந்து இயக்கத்தை வளர்த்தவருமான டி.கே.பழனிச்சாமியின் 25வது நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாரது திருஉருவச் சிலைக்கு தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதில் டி.கே.பழனிச்சாமியின் மருமகனும், திருவொற்றியூர் கிழக்கு பகுதி அவைத் தலைவருமான ஆர் .சி.ஆசைதம்பி, டாக்டர் ஜி.ராஜ்குமார், சங்கர், அ.பெ.சி. உசிலை வேந்தன், தனசேகரன், அம்மையப்பர் சேவை மையத்தின் நிர்வாகிகள் எசிஎல். எஸ். சீனிவாசன், கே.எஸ்.கோபி, எஸ்.அன்பு நித்தியா, எஸ்.திருமாறன், எஸ்.தியாகராஜன், ஜெ.எல்லப்பன், ர.சீனிவாசன், வி.ஜி.எம். கோவிந்தராஜ், ஜி.சாந்திமற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி

# 131வது வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

சென்னை, செப்.25-

தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 131வது வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், ஆலோசனைக் கூட்டம் வட்ட அவைத் தலைவர் வி.டி.செல்வம் தலைமையில் இன்று (25.09.2025 - வியாழக் கிழமை) மாலை 6.00 மணிக்கு மேற்கு மாம்பலம், போஸ்டல் காலனி 4வது தெருவில் உள்ள மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தியாகரா யர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., தியாகராயர்நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., தியாகராயர் நகர் கிழக்கு பகுதி அவைத் தலைவர் மு.மணிவண்ணன், தொகுதி பார்வையாளர் ரத்ணா லோகேஷ்வரன் எம்.சி., 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணி வண்ணன், ஆகியோர்கள் கலந்துக்கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

ஆகையால் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சைதை 169 வது வட்ட அவைத் தலைவர்

# அ.ஆரி உடல் நலக் குறைவு:

## துணை மேயர் மு.மகேஷ்குமார் நலம்விசாரித்தார்!

சென்னை, செப். 25 -

சைதை கிழக்குப் பகுதி 169-வது வட்டக் கழக அவைத் தலைவர் அ.ஆரி, கடந்த மாதம் இரண்டு சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்த போது, சாலை விபத்திற்குள்ளாகி, கழகத் தோழர்கள் அவரை ராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தனர். அம் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். தகவல் அறிந்த மாவட்டக் கழகச் செயலாளரும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் நேரில் வந்து நலம் விசாரித்து, மருத்துவர்களிடம் சிகிச்சை முறையை கேட்டறிந்து, துரித சிகிச்சை அளிக்க மருத்துவர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும் சென்னை பெருநகர மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமாரும் மருத்துவமனைக்கு வந்து நலம் விசாரித்துச் சென்றார். மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து, இல்லத்தில் ஓய்வெடுத்து வரும் வட்ட அவைத் தலைவர் அ.ஆரியை நேற்று முன்தினம் (23.9.2025) அவரது இல்லத்திற்கு நேரில் வந்த தலைமைச் செயற்குழு உறுப்பினரும், சென்னை பெருமாநகராட்சி துணை மேயருமான மு.மகேஷ்குமார், அ. ஆரியின் உடல் நிலை குறித்து அவரது குடும்பத்தாரிடம் கேட்டறிந்தார். அவருக்கு மருத்துவத்திற்கு நிதி உதவி அளித்தார்.

அதுபோது வட்டக் கழகச் செயலாளர் எல். ஆரோக்கிய ராஜ், மாவட்டப் பிரதிநிதி இரா.சுதாபிரியன், வட்டக் கழகத்தினர் இரா.தமிழ்வாணன், துரைசரவணன், சைத. ஆ.விக்டர், சூரியன் கே.பிரபு, ஜோ.சசிகுமார், அ.தமிழரசன், ஆ.ரஷீத், ஆ.தேவன், மேகநாதன், சன் சின்னா, சரத், நா. சுரேஷ், பி.டி.சி.ராஜா, மோகன், சுந்தரம், தணி, எல். வனஜா மற்றும் பலர் உடனிருந்தனர்.

## கழக சிறுபான்மையினர் நல அணி துணை செயலாளர்

# எம்.ஜி.ராபர்ட் ராஜதுரை பாட்டி கு.ஜெகதாம்பாள் ஜாய் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

திருவள்ளூர் செப் ,25;

திமுகழக முன்னோடி திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மெரட்டூர் கிராமத்தில் முதல் கிளை கழகத்தை துவக்கி யவரும் மிசா இந்தி எதிர்ப்பு போராட்டில் கழகத்திற்காக சிறை சென்றவருமான குணசீலன் அவர்களின் மனைவியும்

கழக சிறுபான்மையினர் நல அணி துணை செயலாளர் அத்திபட்டு எம்.ஜி. ராபர்ட் ராஜதுரை பாட்டியும் கு.ஜெகதாம்பாள் ஜாய் வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார் அன்னாரின் மறைவிற்கு

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார் மற்றும் மாவட்ட துணை செயலாளர் கோளூர் மு.கதிரவன் மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆர். டி.இ.உதயசூரியன் மீஞ்சூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜெகதீசன் முன்னாள் மீஞ்சூர் பேரூர் செயலாளர் மோகன் ராஜ் மாவட்ட ஆதிதிராவிட நல குழு தலைவர் மீஞ்சூர் மீ.வி.கோதண்டம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் மலர் மாலை அனைத்து அஞ்சலி செலுத்தினார்கள்

## தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 135 ‘அ’ வட்டம்

# மாவட்டப் பிரதிநிதி ஆ.வெங்கடேசன் மறைவு!

## மயிலை த.வேலு - கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, செப். 25-

சென்னை தென் மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணியின் சகோதரரும் தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 135 அ வட்ட கழகத்தின் செயலாளர் மு.செல்வகுமாரின் மாமாவும் தென்மேற்கு இளைஞரணி சேர்ந்த வசந்த, விஷ்வா, வர்ஷா ஆகியோரின் தந்தையும் மகளிர் அணியை சார்ந்த மேகலாதேவியின் கணவருமான மாவட்டப் பிரதிநிதி ஆ.வெங்கடேசன் நேற்று பிற்பகல் 2 மணியளவில் மரணம் அடைந்தார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்தவுடன் தென்சென்னை மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று 25.09.2025 மாலை 5 மணி அளவில் அவர் கள் இல்லத்திலிருந்து புறப்பட்டு ஏ.வி.எம். இடுகாட்டில் அடக்கம் செய்யப்படும். எனவே தியாகராயர் நகர் தொகுதி சார்ந்த கழக நிர்வாகிகள் மற்றும் 135அ வட்டத்தின் சார்பாக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர்

# பீலா வெங்கடேசன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.25–

தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் பீலா வெங்கடேசன் மறைவுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு :–

தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் திருமிகு. பீலா வெங்கடேசன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

அடிப்படையில் மருத்துவரான பீலா வெங்கடேசன் அவர்கள், இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்வாகி, பல்வேறு முக்கியத் துறைகளில் செயலாளராகப் பணியாற்றிய அனுபவமிக்கவர். கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் சவால் மிகுந்த மருத்துவத் துறைச் செயலாளராகப் பணியாற்றியவர். மேலும் பல பெரும் பொறுப்புகளில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்த அவரது அகால மரணம் மிகுந்த வருத்தமளிக்கிறது.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## சென்னை தென் மேற்கு மாவட்டம்

# பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## மண்டலப் பொறுப்பாளர் ஆ.ராசா எம்.பி. சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் உள்ள இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் பணிகளை ஆற்றிடுவதற்காக பூத் ஒருங்கிணைப்பாளர்கள் அந்தந்த பகுதி கழக செயலாளர்களுடன் இணைந்து சட்டமன்ற தேர்தல் பணியாற்றுவது சம்பந்தமாக.

பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் 26.9.2025 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் ஆர்.ஏ.புரம், சிறுங்கேரிமடம் சாலையில் உள்ள மகிழ்மன்றம் மஹாலில் எனது தலைமையில் (மயிலை த.வேலு.எம்.எல்.ஏ) கழக துணை பொதுசெயலாளர் மண்டலப் பொறுப்பாளர் ஆ.ராசா.எம்.பி. சிறப்புரையாற்றுகிறார். மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் சட்டமன்ற தொகுதிபார்வையாளர்கள், |பகுதிகழகச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு வனத்துறை தலைமை இடத்து சரகம் வன விரிவாக்கம் மையம் காஞ்சிபுரம் வனக்கோட்டம் பசுமை தமிழ்நாடு தினம் மற்றும் மரக்கன்று நடும் விழா வேலம்மாள் போதி கேம்பஸ் பள்ளியில் நேற்று நடைபெற்றது இதில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி. எம். பி. எழிலரசன், க.செல்வம் எம்.பி. ஆகியோர் மரக்கன்று நட்டனர். உடன் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், மாவட்ட வன அலுவலர் ரவி மீனா, சேர்மன் மற்றும் பள்ளி நிர்வாகிகள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் 52வது வார்டில் சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமில், ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு, அனைத்து துறைகளிலும் பொதுமக்களின் மனுக்கள் முறையாக பதிவு செய்யப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து, தீர்வு காணப்பட்ட மனுக்களை உடனடியாக பொதுமக்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், வட்டச் செயலாளர் கொரியர் முருகன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.



திருவொற்றியூர் கிழக்கு பகுதி 9வது வட்டத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' 23 துறைகளைச் சேர்ந்த 43 திட்டங்கள் மூலம் மக்கள் பயன்பெற நடைபெற்ற முகாமில் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் கலந்து கொண்டு பொதுமக்கள், பயனாளிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்தார். உடன் 9வதுவட்டக் கழகச் செயலாளர் எம்.எல்.சரவணன், திருவொற்றியூர் மண்டல அலுவலர், அதிகாரிகள் மற்றும் எஸ்.தமிழ்வாணன், ஜெய்சங்கர், பிரகலாதன், எஸ்.சுப்பிரமணி, ராஜி, பால்ராஜ் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.